**செய்தி வெளியீடு எண் : 2164** **நாள் : 01.12.2022**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரிந்து, விருப்ப ஓய்வு பெற்ற / இறந்த பணியாளர்களின் வருங்கால வைப்புநிதி, பணிக்கொடை, விடுப்பு ஒப்படைப்பு தொகை மற்றும் ஓய்வூதிய ஒப்படைப்பு தொகை உள்ளிட்ட பணப்பலன்களுக்குரிய காசோலைகளை வழங்கி, சுகாதாரம் மற்றும் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்து ஹுண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் "Mission Chennai " என்ற திட்ட வாகனத்தை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. சா.சி.சிவசங்கர் அவர்கள் கொடி அசைத்து துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் கடந்த மே–2020 முதல் மார்ச்–2021 வரை பணிபுரிந்து விருப்ப ஓய்வு பெற்ற / இறந்த பணியாளர்கள் என மொத்தம் 1,241 நபர்களுக்கு வருங்கால வைப்புநிதி, பணிக்கொடை, விடுப்பு ஒப்படைப்பு தொகை மற்றும் ஓய்வூதிய ஒப்படைப்புத் தொகை உள்ளிட்ட பணப் பலன்கள் ரூ.242.67 கோடி வழங்கிட உத்தரவிட்டுள்ளார்கள்.

மாநகர் போக்குவரத்துக் கழக மத்திய பணிமனையில், இன்று (01.12.2022) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.சா.சி.சிவசங்கர் அவர்கள், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களைச் சார்ந்த 22 விருப்ப ஓய்வு பெற்ற / இறந்த பணியாளர்களின் வருங்கால வைப்புநிதி, பணிக்கொடை, விடுப்பு ஒப்படைப்பு தொகை மற்றும் ஓய்வூதிய ஒப்படைப்புத் தொகை உள்ளிட்ட பணப்பலன்களுக்குரிய காசோலைகளை வழங்கினார்கள். அதனைத் தொடர்ந்து, ஏனைய 1,219 பணியாளர்களுக்கும் அந்தந்தப் போக்குவரத்துக் கழக நிர்வாகத்தின் வாயிலாக காசோலைகள் வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.சா.சி.சிவசங்கர் அவர்கள், மாநகர் போக்குவரத்துக் கழகப் பணிமனைகளில் சுகாதாரம் மற்றும் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்து ஹுண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் "Mission Chennai" என்ற திட்ட வாகனத்தை (Mobile Medical Vehicle) கொடி அசைத்து துவக்கி வைத்தார்கள்.

மாநகர் போக்குவரத்துக் கழக தலைமையகம் மற்றும் அனைத்துப் பணிமனைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கும் கண் பரிசோதனை, இரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை நோய் ஆகிய பரிசோதனைகள் செய்திட CSR திட்டம் – ஹுண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் நடமாடும் மருத்துவ வாகனத்தில் உள்ள சிறப்பு அம்சமாகும். மேலும், சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்த "Mission Chennai" என்ற திட்டத்தின் வாயிலாக இரண்டு பயிற்சி மையத்தில், தகுதி வாய்ந்த பயிற்சியாளர்களைக் கொண்டு சாலை பாதுகாப்பு சம்பந்தமாக ஓட்டுநர் மற்றும் நடத்துநர்களுக்கு பயிற்சியும் (Training) அளிக்கப்பட உள்ளது.

இவ்விழாவில், போக்குவரத்துத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., திரு.டி.எஸ்.கிம், செயல் இயக்குநர், ஹுண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் நிறுவனம் & திரு. சி.எஸ்.கோபால கிருஷ்ணன், அறங்காவலர், ஹுண்டாய் மோட்டார் இந்தியா ஃபவுண்டேஷன், போக்குவரத்துக் கழக உயர் அலுவலர்கள் மற்றும் தொழிற் சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.

***********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in